# நேரம் குறித்தல் தகவல்கள்

*சந்திப்பதற்கான நேரம் குறிக்க: 3333 2100 எண்ணில் அழைத்திடுங்கள் அல்லது இணையத்தில் பதிவுசெய்திடுங்கள்*

**பொது மருத்துவரை சந்திப்பதற்கான சாதாரண நேரக் குறிப்பு** (15 நிமிடங்கள்) ஒரு பிரச்சினைக்கு மட்டும்

**பொது மருத்துவரைச் சந்திப்பதற்கான நெடுநேர நேரக் குறிப்பு** (30) நிமிடங்கள், இரண்டு பிரச்சினைக்குத் தருகிறோம், சிக்கலான பிரச்சினைகள், கருப்பை வாய் தடவல் மாதிரி, உடல்நலப் பரிசோதனைகள் அல்லது மன நலப் பிரச்சினைகளுக்கு. உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவை என்றால், தயவுசெய்து எங்களுக்குத் தெரிவியுங்கள் - நாங்கள் சந்திப்பதற்கான நெடுநேர நேரக் குறிப்பையும், மொழிபெயர்ப்பாளரையும் பதிவு செய்து வைப்போம்

நாங்கள் முன்னமே நேரம் குறித்துச் செயல்பட்டு வந்தாலும் கூட, அவசர சிகிச்சைகளுக்கு நாங்கள் முன்னுரிமை கொடுக்கத்தான் செய்கிறோம், அதோடு எங்களது வரவேற்பு ஊழியர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தாமதம் ஏற்படுகிற நிலையில், உங்களைத் தொடர்பு கொண்டு தெரிவிப்பார்கள்.

மனோவியல் சிகிச்சைக்காக நேரம் குறிப்பது பொதுவாகவே ஒரு மணி நேரமாகவே இருக்கிறது
அக்குபஞ்சர் சிகிச்சைக்கு நேரம் குறிப்பது பொதுவாக 30-45 நிமிடங்களாக இருக்கிறது.
மசாஜ் செய்வதற்கு நேரம் குறிப்பது 30 நிமிடங்களாகும்.
ஹோமியோபதி சிகிச்சைக்கு நேரம் குறிப்பது ஆரம்பகட்ட ஆலோசனைக்கு 1.5 மணி நேரங்களும் அடுத்தடுத்த ஆலோசனைகளுக்கு 30 நிமிடங்களுமாகும்.

## கட்டணங்கள்

மருத்துவ சிகிச்சைகளுக்கு நேரம் குறிப்பதற்கு மொத்தமாகவே கட்டணம் விதிக்கிறோம்.
சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்கள் - தயவுசெய்து உங்களது சுகாதாரக் காப்பீட்டு அட்டையைக் கொண்டுவந்து விடுங்கள். இடைவெளிக் கட்டணம் ஒன்றும் விதிப்பதில்லை.

மன நல மருத்துவம் / துணை மருத்துவம் - கட்டங்கள் இல்லை அல்லது மொத்தமாக கட்டணம் விதிக்கிறோம், பிரத்தியேகமான சிகிச்சைகளுக்கு சில கட்டங்களை விதிக்கலாம்

அக்குபஞ்சர், மஸ்சாஜ் மற்றும் ஹோமியோபதி சிம்கிச்சைக்குக் கட்டணங்கள் உண்டு – தயவுசெய்து சமீபத்திய கட்டண விவரங்களுக்கு எங்களது இணையதளத்தில் பாருங்கள். முன்–பணம் செலுத்துவது அவசியம்.

சேவைத் திட்டங்களுக்கென கூடுதல் கட்டணங்களை வைத்துள்ளோம், விவரங்களுக்கு தயவுசெய்து எங்களது இணையதளத்தைப் பாருங்கள்.

கட்டணங்களை ஆலோசனை பெறும் நேரத்தில் ரொக்கமாகவோ அல்லது EFTPOS ஆகவோ செலுத்தலாம்.

## சேவைகள்

நாங்கள் மருத்துவ, துணை மருத்துவ மற்றும் பாரம்பரிய மருத்துவம் ஒன்றிணைந்த, முழுமையானதும், ஒருங்கிணைந்ததுமான கவனிப்பைத் தருகிறோம்

- பொதுமருத்துவ சிகிச்சைமையம்
- மன நலம் & நல வாழ்வுச் சேவை
- துணை மருத்துவம்
- பாரம்பரிய மருத்துவம்
- சுகாதார மேம்பாடு & குழுத் திட்டங்கள்

## சிகிச்சைமையம் செயல்படும் நேரங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை
(புதன் கிழமைகளில் காலை 9.30 மணி தவிர்த்து)
வார இறுதி நாட்கள் - மூடியிருக்கும்
சமீபத்திய திறப்பு நேரங்களுக்கு தயவுசெய்து எங்களது இணையதளத்தில் பாருங்கள்

## வேலை நேரங்களுக்குப் பிறகான கவனிப்பு

நீங்கள் நேஷனல் ஹோம் டாக்டர் செர்வீஸ் (தொ.பேசி. 13 74 25) சேவையைத் தொடர்பு கொள்ளுமாறு சிபாரிசு செய்கிறோம், அவர்கள் எங்களுக்கு ஒரு அறிக்கை தருவார்கள், அதைக் கொண்டு நாங்கள் அடுத்த நாள் பகல் பொழுதில் உங்களைத் தொடர்ந்து கவனிப்போம். இந்தச் சேவைக்கு மொத்தமாகவே கட்டணம் விதிக்கிறோம்.

World Wellness Group


33 Stoneham Street
Stones Corner Qld 4120
Ph: (07) 3333 2100
Fax: (07) 3397 1358
ABN 95154368804


# World Wellness Clinic

## வேர்ல்டு வெல்னஸ் கிளினிக்




(07) 3333 2100
worldwellnessgroup.org.au

## எங்களைப் பற்றி

நாங்கள், ஒவ்வொருவருக்கும், அணுகிப் பெறக்கூடியதும், கட்டுபடியாகிறதும், ஏற்றதுமான சுகாதாரக் கவனிப்பைப் பெறுவதற்கான உரிமை இருக்கிறது என்றே நாங்கள் நம்புகிறோம், அவர்கள் யார் என்பது ஒரு பொருட்டல்ல. ஆகவே எங்களது சேவைகள் பெரும்பாலானவற்றுக்கு நாங்கள் மொத்தமாகவே கட்டணம் விதித்து, கட்டணங்களைக் கட்டுபடியாக வைக்க முயற்சிக்கிறோம். நாங்கள் சமுதாய ரீதியாக பாதிப்படைந்தவர்களுக்கு சுகாதாரப் பணிகளை வழங்குவதிலும் நாங்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளோம், அவர்களில், பல்வேறு கலாச்சாரப் பின்னணியத்தில் இருந்து வருகிறவர்களும் அடங்குவர், அதோடு நாங்கள் வழக்கமாகவே மொழிபெயர்ப்பாளர்களை உபயோகிக்கிறோம். எங்களை தங்களுக்கு சுகாதாரச் சேவையளிப்பவராகத் தேர்ந்தெடுக்கிற, சமுதாயத்தில் உள்ள எவருக்கும் நாங்கள் திறந்த மனதோடு சிகிச்சையளிக்கிறோம். உள்ளபடி, எங்களைத் தெரிவு செய்வதன் மூலமாக, நீங்கள் சமுதாயத்தில் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு உதவ நீங்கள் எங்களுக்கு உதவுகிறீர்கள்.

ஒரு சமுதாய நிறுவன சிகிச்சை மையமாக, நாங்கள் எங்களது சம்பாத்தியத்தை
கட்டணம் செலுத்த முடியாதவர்களுக்கு சுகாதாரப் பணிகளைத் தருவதற்காக மாற்றிவிடுகிறோம்.

நாங்கள் பதிவு பெற்றுள்ள ஒரு தொண்டு நிறுவனமாகவும் இருக்கிறோம். இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள அல்லது நன்கொடை அளிக்க, தயவுசெய்து வருகை தாருங்கள்:
*www.worldwellnessgroup.org.au*
*$2* மேலான உங்களது நன்கொடைக்கு வரிப் பிடித்தம் உண்டு.

Accredited General Practice

## பொது மருத்துவச் சேவைகள் கிடைக்கின்றன

- பரிசோதனைகள் மற்றும் பொதுவான குடும்ப மருத்துவம்
- உடல்நல மதிப்பீடுகள் & மேலாண்மைத் திட்டங்கள்
- மன நல மதிப்பீடுகள்
- அகதி நல மதிப்பீடுகள்
- தஞ்சம் சுகாதாரக் கவனிப்பு
- தடுப்பூசிகள்/தடுப்பு மருந்துகள்
- பெண்களுக்கான சுகாதாரப் பணிகள்
- தடுப்பு மருத்துவம்
- பிரத்தியேக வேண்டுகோளின் பேரில் மட்டும் வீட்டிற்கு வருகை தருதல்
- ஆண்களுக்கான மருத்துவம்

## தொடர்ந்து நலமுடன் இருத்தல்

எங்களது வாடிக்கையாளர்கள் அனைவரையும் தொடர்ந்து நலமுடன் இருக்கச் செய்யவும்,
அவர்களது உடல் நல மற்றும் நலவாழ்வை உகந்த நிலையில் வைக்கவும், நாங்கள் பல்வேறு விதமான குழு சுகாதாரத் திட்டங்களையும், சிகிச்சைக் குழுக்களையும், சுய-மேலாண்மைத் திட்டங்களையும் வைத்துள்ளோம்.

## மொழிபெயர்ப்பாளர்கள்

நாங்கள், உங்களுக்குச் செலவேதும் வைக்காமலேயே, தொலைபேசி மொழிபெயர்ப்பாளர்களை உபயோகித்துக் கொள்கிறோம்.
உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவையா என்பதையும்,
எந்த மொழியில் தேவை என்பதையும் தயவுசெய்து எங்களுக்குத் தெரிவித்திடுங்கள். சிக்கலான விஷயங்களுக்கு, எங்களால் சிகிச்சைபெறும் இடத்திலேயே மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்து தர முடியும்.

## உங்களது பரிசோதனை முடிவுகளைப் பெறுதல்

உங்களது பரிசோதனை அல்லது நடைமுறைக்கான முடிவுகள் எங்களது சிகிச்சை மையத்திற்கு வந்து சேரப் பெறுவது எப்போது எதிர்பார்க்கலாம் என்பதை உங்கள் மருத்துவர் சொல்லுவார்.
அம்முடிவுகள் குறித்துக் கலந்தாலோசிக்க,
தொடர் பரிசோதனை சந்திப்பு ஒன்றுக்கு நீங்கள் நேரம் குறிக்க நேரலாம்.

## தொலைபேசி அணுகல்

எங்களது பொது மருத்துவர்களை, சாதாரணமாக சிகிச்சைமையம் திறந்திருக்கும் நேரங்களில்
தொடர்பு கொள்ளலாம். பொது மருத்துவரால் உங்கள் அழைப்பை ஏற்க முடியவில்லை என்றால், நாங்கள் செய்தியொன்றைப் பெற்றுக் கொள்வோம், பொதுமருத்துவர் உங்களைத் திருப்பிக் கூப்பிடுவார். நீங்கள் அழைத்தது, அவசர விஷயமா என்பதை தயவுசெய்து எங்களிடம் தெரிவியுங்கள்.

## வீட்டிற்கு வருகை புரிதல்

பிரத்தியேகமாக முன்னர் ஏற்பாடு செய்து கொண்டும், ஒருசில சூழ்நிலைகளிலும் மட்டுமே
எங்களால் வீட்டிற்கு வருகை தர முடியும். தயவுசெய்து எங்களது ஊழியர்களிடம் கேளுங்கள்.



## நினைவூட்டல் அமைப்பு

எங்களது சிகிச்சை மையம் வருமுன் தடுக்கும் சிகிச்சைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. உங்களை எங்களது நினைவூட்டல் அமைப்பில் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதியை நாங்கள் உங்களிடம்
கேட்போம். உங்களது பராமரிப்பிற்கு ஏற்ற வருமுன் காக்கும் சுகாதாரச் சேவைகளைத் தரும் நினைவூட்டல் அறிவிப்பை நாங்கள் அனுப்பி வைக்கலாம்.

## அந்தரங்கம்

உங்களது மருத்துவத் தகவல்கள் இரகசியமானவையாகும்.
எல்லா நேரங்களிலும் தனிப்பட்ட
உடல்நலத் தகவல்களின் பாதுகாப்பைப் பராமரிப்பதும், அத்தகவல்கள் அங்கீகாரம் பெற்ற ஊழியர்களுக்கு மட்டுமே கிடைக்கப்பெறுவதைப் பார்த்துக் கொள்வதும் எங்களது சிகிச்சை
மையத்தின் கொள்கையாகும். நாங்கள்
*10* தேசிய அந்தரங்கக் கொள்கைகளுக்கு இணங்கி நடக்கிறோம்.

## புகார்கள் மற்றும் பாராட்டுக்கள்

உங்களது பின்னூட்டக் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பளிக்கிறோம், நாங்கள் எப்போதுமே
எங்களது சேவைகளை மேம்படுத்துவதற்கான வழிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.
நீங்கள் பின்னூட்டக் கருத்தை வழங்க முடிகிற வழிகள்:

1. வரவேற்பில் இருக்கிற ஆலோசனைப் பெட்டி
2. எங்களிடம் பேசி, வாய்வார்த்தை மூலமாக பின்னூட்டக் கருத்தை வழங்குவது
3. மின்னஞ்சல் (*admin@worldwellnessgroup.org.au*)
4. எங்களது இணையதளத்தில் இருக்கிற வாடிக்கையாளர் பின்னூட்ட அமைப்பு மூலமாக

உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருக்கிறதென்றால், அது குறித்து நாங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். உங்களது ஐயங்கள், ஆலோசனைகள் மற்றும் புகார்களை நாங்கள் தீவிரமானவைகளாகவே
எடுத்துக்கொள்கிறோம்.

குயின்ஸ்லாந்தில், தீர்க்கப்பெறாத புகார்களையும் அனுப்ப வேண்டியது:

சுகாதார மத்தியஸ்தர் அலுவலகம்

தொலைபேசி: *133 646*